தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

2.05.2013 A.M

## வறட்சி பாதித்த அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு நடத்த மத்தியக் குழு மே 6-ல் தமிழகம் வருகை

வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு செய்ய மத்தியக் குழுவினர் மே 6-ஆம் தேதி தமிழகம் வருகின்றனர்.

இந்தக் குழுவினர் மூன்று முதல் நான்கு நாள்கள் வரை பாதிக்கப்பட்ட பகுதிகளில் கள ஆய்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழகத்தின் மத்திய மற்றும் தென் மாவட்டங்களில் மத்தியக் குழுவினர் தங்களது ஆய்வினை தீவிரமாக மேற்கொள்வர் என வருவாய்த் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கடுமையான வறட்சி நிலவுகிறது. டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் என அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் கடும் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் நிலவும் இந்த அசாதாரணமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு நிவாரணத் திட்டங்களை அறிவித்துள்ளது.

டெல்டா மாவட்டங்களுக்கு ஏற்கெனவே நிவாரண உதவிகளை அறிவித்த முதல்வர் ஜெயலலிதா, பிற மாவட்டங்களில் ஆய்வு செய்ய நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் குழு அமைத்தார். இந்தக் குழுவினர் 18 மாவட்டங்களில் தங்களது ஆய்வினை வெவ்வேறு நாள்களில் மேற்கொண்டனர்.

அரசுக்கு அறிக்கை: மார்ச் 16- ஆம் தேதி மதுரை, திண்டுக்கல், சிவகங்கை என தென் மாவட்டங்களில் தொடங்கிய ஆய்வு கரூர், பெரம்பலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முடிவடைந்தது.

இந்தக் குழு தமிழக அரசுக்கு அளித்த அறிக்கையின் அடிப்படையில், டெல்டா அல்லாத தமிழகத்தின் 18 மாவட்டங்களுக்கு ரூ.1,754.86 கோடி மதிப்பிலான நிவாரண தொகுப்புகளை சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கடந்த மாதம் 19- ஆம் தேதி அறிவித்தார்.

மத்திய அரசுக்குக் கோரிக்கை: சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்பில், மத்திய அரசுக்கு ரூ.19,665.13 கோடி மதிப்பிலான நிவாரண கோரிக்கை மனுவை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவித்தார். இந்த நிலையில் தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்ய மத்தியக் குழு மே 6 ஆம் தேதி தமிழகம் வருகிறது.

இந்தக் குழுவின் அதிகாரப்பூர்வ பயணத் திட்டங்கள் குறித்து வியாழக்கிழமை (மே 2) அறிவிப்பு வெளியாகும் என்று வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூன்று நாள்கள் வரை ஆய்வு: மத்தியக் குழுவினர் திருச்சி மற்றும் மதுரையை மையமாகக் கொண்டு, அதாவது தமிழகத்தின் மத்திய மற்றும் தென் மாவட்டங்களில் தங்களது கள ஆய்வுப் பணிகளை மேற்கொள்வர் எனத் தெரிகிறது. இந்தக் குழுவினர் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் தமிழகத்துக்கான வறட்சி நிவாரண நிதி ஒதுக்கப்படும் எனக் கூறப்படுகிறது. மே 9 அல்லது 10-ஆம் தேதி வரை நடைபெறும் கள ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மத்தியக் குழுவினர் சென்னையில் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவர் என தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக அரசின் சார்பில் மத்தியக் குழுவிடம் வறட்சி நிவாரணம் தொடர்பான கோரிக்கை மனுவும், ஏற்கெனவே அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் நகல்களும் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

## சில்வர் டிப்ஸ் தேயிலையை உற்பத்தி செய்தால் தொழில் மேன்மையடையும்: செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன்

சில்வர் டிப்ஸ் தேயிலையை உற்பத்தி செய்தால் தேயிலைத் தொழில் மேன்மையடையும் என்று, ஓவேலியில் புதன்கிழமை நடைபெற்ற சிறு விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் பேசினார்.

ஓவேலி அரசு மேல்நிலைப் பள்ளி அரங்கில் நடைபெற்ற பெரியார் நகர் சிறு தேயிலை விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் அவர் பேசியது:

சில்வர் டிப்ஸ் தேயிலை கிலோவுக்கு ரூ.3 ஆயிரம் வரை விலை உள்ளது; இதை உற்பத்தி செய்வதும் எளிது. இந்த ரக தேயிலையை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டினால் தேயிலைத்

தொழில் சிறந்து விளங்குவதுடன் சிறு விவசாயிகளின் வாழ்வும் சிறக்கும். தாழ்த்தப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மானியம் வழங்கப்படுகிறது.

அரசின் நலத் திட்டங்கள் முறையாக பயனாளிகளுக்குச் சென்று சேர வேண்டும் என்பதில் தேயிலை வாரியம் அக்கறை கொண்டுள்ளது.

போலி சாதிச் சான்றிதழ் கொடுத்து தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கான சலுகைகளை பிற வகுப்பினர் பெறுவதாக வந்த புகாருக்கு தேயிலை வாரியம் பதில் சொல்ல முடியாது. போலிச் சான்று இருந்தால் வருவாய்த் துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்ல பல திட்டங்களை தேயிலை வாரியம் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இதைப் பயன்படுத்தி சிறு விவசாயிகள் சிறப்பாக வாழ வேண்டும் என்றார்.

விழாவுக்கு பெரியார் நகர் சங்கத் தலைவர் டி.முருகன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் சிங்காரவேலு முன்னிலை வகித்தார். உபாசி கே.வி.கே. அமைப்பின் தலைமை விஞ்ஞானி ஜீ.ராமமூர்த்தி, உட்பிரிட்ஜ் தேயிலை தொழிற்சாலை பொது மேலாளர் பி.ஈஸ்வரன், உபாசி கள அலுவலர் அன்பரசு, இ.எல்.லிண்டோ, சங்கரநாராயணன், நடாசா உள்பட பலர் கலந்து கொண்டனர். சிறந்த முறையில் பசுந்தேயிலை உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக, சங்க செயலாளர் ஆர்.ராமச்சந்திரன் வரவேற்றார். துணைச் செயலாளர் பி.சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

## உரங்களுக்கான மானியங்கள் குறைப்பு

இந்த நிதியாண்டுக்கு பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான மானியங்களை குறைக்க மத்திய அமைச்சரவை புதன்கிழமை முடிவெடுத்துள்ளது.

சர்வதேச அளவில் உரங்களின் விலை குறைவு ஏற்பட்டதால் அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. இதன்மூலம் அரசுக்கு ரூ. 5 ஆயிரம் கோடி மிச்சமாகும்.

உரங்களுக்கான மானியம் குறைக்கப்பட்டபோதும், டை அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் குளோரைடு போன்ற உரங்களின் அதிகபட்ச சில்லறை விலை ஒரு டன்னுக்கு முறையே ரூ.1500 மற்றும் ரூ. 1000 குறையும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

இது குறித்து மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறுகையில், "பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான மானியத்தை குறைத்து மத்திய அமைச்சரவை முக்கியமான முடிவை எடுத்துள்ளது.

இந்த நிதியாண்டுக்கான மானியக் குறைப்பு என்பது 15 சதவீதம்தான். உரங்களின் பயன்பாட்டைப் பொறுத்தே அதற்கு அளித்து வரும் மானியத்தின் அளவு அமையும்' என்றார்.

## மிளகாயில் காய்ப்புழுக் கட்டுப்பாடு



ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மூலம் மிளகாயில் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்தி உயர்மகசூல் பெறலாம் என்று சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மிளகாய் பயிர் இப்போது காய்ப்புப் பருவத்தில் உள்ளது. இத் தருணத்தில் காய்ப்புழு மிகுந்த மகசூல் இழப்பை மிளகாயில் ஏற்படுத்தும். இந்தக் காய்ப்புழுக்களை ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு கட்டுப்படுத்தலாம். அதன்மூலம் உயர் மகசூலும், அதிக லாபமும் பெறலாம்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள்

1. இனக்கவர்ச்சி பொறி வைத்தல்: ஒரு ஏக்கருக்கு 5 என்ற அளவில் இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து, புரோடினியா காய்ப்புழுக்களின் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

2. பாதிக்கப்பட்ட காய்கள் மற்றும் புழுக்களைச் சேகரித்து அழிக்கலாம்.

3. ஒரு லிட்டர் நீரில் 2 கிராம் என்ற அளவில் பேசில்லஸ் துரின்ஜன்சிஸ் என்ற உயிர்ப் பூச்சிக் கொல்லியைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

4. நச்சுத்தீனி வைத்தல்: ஒரு ஏக்கருக்கு 500 கிராம் கார்பரில் 50 சத நனையும் தூள், 5 கிலோ பச்சரிசித் தவிடு, 500 கிராம் வெல்லம், 3 லிட்டர் தண்ணீர் கலந்து தயாரித்த நச்சுத்தீனியை மாலை வேளைகளில் வயலின் பல்வேறு இடங்களில் சிறுசிறு உருண்டைகளாக வயல் முழுவதும் வைக்கலாம்.

இரவுதான் இப்புழுக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் மாலை வேளைகளில்தான் இந்த நச்சுத் தீனியை வைக்க வேண்டும். காலையில் இதை உண்டு இறந்து கிடக்கும் புழுக்களைக் காணமுடியும்.

5. பயிர்ப் பாதுகாப்பு மருந்து தெளித்தல்: ஒரு லிட்டர் நீருக்கு 3 கிராம் கார்பரில் 50 சதம் அல்லது 3 மிலி குளோர்பைரிபாஸ், 20 ஈ.சி. அல்லது இரண்டரை மிலி குயினோல்பாஸ், 25 ஈ.சி. மருந்துகளில் ஏதேனும் ஒன்றை கலந்து மாலை வேளைகளில் தெளிக்கலாம்.

இவ்வாறு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்து மிளகாயில் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்தி உயர் மகசூலும், லாபமும் பெறலாம் என்றார் அவர்.

## தென்னை, பாக்கு தோட்டங்களில் கோகோ பயிர் சாகுபடி!



தென்னை, பாக்கு தோட்டங்களில் கோகோ பயிர் ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம்.

உகந்த இடம்: பணப்பயிராக விளங்கும் கோகோ சாகுபடி செய்ய 50 சதம் நிழல் உள்ள பகுதிகளே தேவை. களிமண், கடலோர மணல் பகுதிகளில் சாகுபடி செய்ய முடியாது. தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள கோகோ பயிரிடலாம்.

தட்பவெப்ப நிலை: கோகோ பயிரானது வறட்சியைத் தாங்காது. எனவே, மண்ணில் அதிக அளவு ஈரத்தைப் பிடித்து வைக்கும் தன்மையுள்ள மண்ணாக இருக்க வேண்டும்.

நடவு: 1.5-க்கு 1.5-க்கு 1.5 என்ற அளவில் குழிகளை எடுத்து நடவு செய்ய வேண்டும். தென்னந்தோப்புகளில் நடும்போது இரண்டு தென்னை வரிசைகளில் மையப் பகுதியில் கன்றுகளை 10 அடி இடைவெளியில் குழியெடுத்து நடவு செய்ய வேண்டும். பயிர் பாதுகாப்பு: செந்நிற தண்டு துளைப்பாளர், காய் துளைப்பான் பூச்சிகளில் இருந்து பயிரைக் காக்க கந்தகம், எண்டோசல்பான் ஆகியவற்றை தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வேர்ப் புழுக்களைக் கட்டுப்படுத்த 2 கிராம் நனையும் கார்பரேட் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து மரத்தை சுற்றியுள்ள மண் பகுதியில் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

கருங்காய் நோய்: ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கருங்காய் நோய் அதிகம் காணப்படும். நோய் பாதித்த காய்களின் மீது சாக்லெட் நிற புள்ளிகள் ஏற்படும். பின்னர், காய்கள் முழுவதும் படரும். இந்த நோயைக் கட்டுப்படுத்த மழைக்காலம் தொடங்கும் முன்னரும், பின்னரும் போர்டோ கலவையை தெளிக்க வேண்டும்.

நிழல்: கோகோ நிழலில் வளரக்கூடிய பயிர். ஆதலால் 50 முதல் 75 சதம் நிழல் விழும் பகுதியில்தான் நன்கு வளரும்.

அறுவடை: நவம்பரில் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். பூ பிஞ்சாகி முதிர்ந்த காயாக வளர 150 முதல் 170 நாள்கள் ஆகும். நன்கு முதிர்ந்த கோகோ காய் உரித்த தேங்காய் அளவுக்கு இருக்கும். முதிர்ந்த காயில் 30 முதல் 45 விதைகள் இருக்கும். காய் நன்கு முதிரும்போது, பச்சை நிறம் மஞ்சளாக மாறும். 100 காய்களிலிருந்து ஒரு கிலோ ஈர விதைகள் எடுக்கலாம். 3 கிலோ ஈர விதைப்பருவிலிருந்து ஒரு கிலோ உலர்ந்த பருப்புகள் கிடைக்கும். ஒரு விதையின் எடை சராசரி ஒரு கிராம் இருக்க வேண்டும்.

மானியம்: கோகோ பயிரின் பரப்பு, உற்பத்தியை அதிகரிக்க தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் ஹெக்டேருக்கு ரூ.12,500 மானியமாக வழங்கப்படுகிறது. தமிழக அரசுடன் செய்துள்ள ஒப்பந்தப்படி வீரிய ஒட்டு செடிகளை கேட்பரி நிறுவனம் தேர்வு செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

நிகர வருமானம்: கோகோ செடி நடவு செய்த மூன்றாவது ஆண்டில் ஒரு மரத்திலிருந்து சுமார் அரை கிலோ கோகோ விதையும், நான்கு வயதான மரத்திலிருந்து ஒன்றரை கிலோவும் 5 மற்றும் 6 வயதுடைய மரத்திலிருந்து 2.5 கிலோ கோகோ விதையும் கிடைக்கும்.

ஓர் ஏக்கரில் ஊடுபயிராக சாகுபடி செய்துள்ள 200 கோகோ மரங்கள் மூலம் ஓராண்டில் 400 கிலோ உலர்ந்த பருப்பு கிடைக்கும். செலவு போக ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிகர லாபம் கிடைக்கும்.

எனவே, தென்னை, பாக்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்யலாம்.

## தென் மாவட்டங்களுக்கு ஏற்ற "இந்தியத் தேனீ"



தென் மாவட்டங்களுக்கு இந்தியத் தேனீக்களே ஏற்றவை என்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் கு. இளஞ்செழியன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேனீக்களிடம் இருந்து தேன் மட்டுமன்றி அதைவிட விலை மதிப்புள்ள பொருள்களான மெழுகு, அரசக்கூழ், மகரந்தம் போன்றவையும் கிடைக்கின்றன. தேனீக்களில் பல வகைகள் உள்ளன.

மலைத் தேனீ: இவை உருவத்தில் மற்ற தேனீக்களான கொம்புத் தேனீ, இத்தாலியத் தேனீ மற்றும் கொசுத் தேனீக்களை விட பெரியவை. இவை திறந்த வெளியில் கூட்டினை உயர்ந்த மரக்கிளைகள், பாறைகள், அணைக்கட்டுகள் மற்றும் பெரிய கட்டடங்களில் கட்டுகின்றன. உணவு அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் ஒரே மரத்தில் பல தேன் கூடுகளைக் காணலாம்.

அடையின் மேற்பகுதியானது தேன் சேமிப்பிற்கும், அடிப்பகுதி புழு வளர்ப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றை தொந்தரவு செய்தால், கோபத்துடன் அதிக தூரம் துரத்திச் சென்று கொட்டும் தன்மை உடையது. இவை திறந்த வெளியில் மட்டுமே வாழ விரும்புவதால் இவற்றை தேனீப் பெட்டிகளில் வைத்து வளர்க்க முடியாது. இவை அதிக விஷத்தன்மை கொண்டது. மலைத்தேனீக்களால் அதிகளவு மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. ஒரு ஆண்டிற்கு மலைத்தேனீ அடையில் இருந்து 35 கிலோ தேன் கிடைக்கும். இது தவிர மெழுகும் அதிகளவில் கிடைக்கின்றன.

கொம்புத்தேனீ: இவை உருவத்தில் சிறியவை. எனவே, இவை சிறு தேனீ என்றும் அழைக்கப்படுகின்றன. மலைத்தேனீக்களைப் போல அடையினை மரக்கிளைகளிலும், புதர்களிலும் திறந்த வெளியில் கட்டுகின்றன. இவற்றையும் நாம் பெட்டிகளில் வைத்து வளர்க்க முடியாது. இதன் அடையிலிருந்து ஆண்டுக்கு ஒரு கிலோவுக்கு குறைவாகவே தேன் கிடைக்கும்.

இந்தியத் தேனீ: தமிழ்நாட்டின் தென்மாவட்டமான கன்னியாகுமரியில் உள்ள மார்த்தாண்டம் பகுதியில் அதிகளவில் பெட்டிகளில் வைத்து வளர்க்கப்படுவது இந்தியத் தேனீயாகும். இவை தேனடைகளை அடுக்கு அடுக்காகக் கட்டுவதால் இவற்றிற்கு அடுக்குத் தேனீ என்ற பெயரும் உண்டு. இவை இருட்டில் மட்டுமே வாழும் இயல்புடையது. இவை அடைகளை அடுக்கடுக்காக மரப்பொந்துகள், பாறை இடுக்குகள், பாழடைந்த கிணற்றுச் சுவர்கள் போன்றவற்றில் கட்டுகின்றன.

இந்தத் தேனீக்களைக் கோபப்படுத்தினால் கூட்டை விட்டே ஓடிவிடும் இயல்பு உடையது. அதிக தொந்தரவுக்கு உள்ளாகும்போது கொட்டுகின்றன. இவை தேனீ வளர்ப்புக்கு ஏற்ற ரகமாகும். இந்தியத் தேனீ அடைகளில் இருந்து ஆண்டிற்கு 2 முதல் 5 கிலோ வரை தேன் கிடைக்கும்.

இத்தாலியத் தேனீ: இத்தாலியிலிருந்து இந்தியாவுக்கு அறிமுகம் செய்யப்பட்டு, அதிக தேன் தரக்கூடிய அடுக்குத் தேனீ வகையைச் சேர்ந்தது இத்தாலியத் தேனீயாகும். இவை அடைகளை இருட்டில் அடுக்கடுக்காகக் கட்டக்கூடியது. இவை வட இந்திய மாநிலங்களில் அதிகளவில் பெட்டிகளில் வளர்க்கப்படுகின்றன. சாந்தமான குணம் உடையவை. 2 கி.மீ. தொலைவு வரை பறந்து சென்று மதுரம், மகரந்தம் மற்றும் பிசின் போன்றவற்றை சேகரிக்கின்றன. மலர்கள் அதிகமுள்ள தோட்டங்களில் மட்டுமே இவற்றை வளர்க்க இயலும். இத்தாலியத் தேனீ அடைகளில் இருந்து ஆண்டிற்கு 40 கிலோ வரை தேன் கிடைக்கும்.

கொசுத்தேனீ: இவை கொசு போன்று உருவத்தில் மிகவும் சிறியவை. இவற்றால் கொட்ட முடியாது. ஏனெனில் இவற்றின் கொடுக்குகள் வளர்ச்சி குன்றியிருக்கும். மாறாக கடிக்கும் திறன் உடையவை. இவைகள் மரப்பொந்துகள், கல் மற்றும் மண் கொண்டு கட்டப்பட்ட வீடுகளின் இடுக்குகளில் மண், மரப்பிசின் மற்றும் மெழுகு கொண்டு கூடு கட்டுகின்றன. இவற்றின் அடைகள் சிறிய திராட்சைக் குலை போல் காணப்படும்.

இதன் தேனானது ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதன் கூட்டில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 100 கிராம் தேன் மட்டுமே கிடைக்கும். இவற்றை மூங்கில் குழாய்களிலும், சிறிய மண்பானைகளிலும் வளர்க்கலாம். பயிர்களின் மகரந்தச் சேர்க்கையில் பெரும்பங்கு வகிக்கின்றன என்றார் அவர்.

இன்றைய வேளாண் செய்திகள்

2.05.2013 A.M

## ஊட்டச் சத்து உர மானியத்திற்குமத்திய அமைச்சரவை குழு ஒப்புதல்



புதுடில்லி:நடப்பு நிதியாண்டிற்கு, ஊட்டச்சத்து அடிப்படையிலான உரங்களின் மானியத்திற்கு, மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

உரங்கள் துறை, கடந்த 2010ம் ஆண்டு ஏப்ரல் முதல், ஊட்டச் சத்து அடிப்படையில், உரங்களுக்கான மானியத்தை ஆண்டுதோறும் நிர்ணயித்து வருகிறது.இதன்படி, பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசிக் உரங்களில் அடங்கியுள்ள நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாஷ், சல்பர் ஆகிய ஊட்டச்சத்துக்களுக்கான மானிய விலை, கிலோவுக்கு முறையே, 20,875 ரூபாய், 18,679 ரூபாய், 18,333 ரூபாய் மற்றும் 1,677 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலையின் அடிப்படையில், டை அமோனியம் பாஸ்பேட் (டி.ஏ.பி.,), மியூரியேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.,) ஆகியவற்றுக்கான மானியம், ஒரு டன்னுக்கு, முறையே 12,350 ரூபாய் மற்றும், 11,300 ரூபாய் என, நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இந்த விலை, சென்ற ஏப்ரல் 1ம் தேதி முதல் ஓராண்டிற்கு நடைமுறையில் இருக்கும்.

நடப்பு நிதியாண்டில், டி.ஏ.பி., மற்றும் எம்.ஓ.பி., ஆகியவற்றின் அதிகபட்ச சில்லரை விற்பனை விலை குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. புதிய விலை நிர்ணயப்படி, நடப்பு நிதியாண்டில், பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசியம் உரங்களின் விலை, 15 சதவீதம் குறையும்.இத்துடன் மத்திய அரசின் உர மானியச் செலவும் குறையும். எனினும், உரத்தின் நுகர்வு அடிப்படையில், மத்திய

அரசின் மானியச் செலவு இருக்கும். சென்ற 2012-13ம் நிதியாண்டு பட்ஜெட்டில், உர மானியத்திற்கு, 30,576 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

## அதிகாரிகளின் அலட்சியத்தால் வனவிலங்குகள்... பாதிப்பு அணைகளில் ஆக்கிரமிப்பு விவசாயத்தால் நீர் அருந்த வருவதில் சிக்கல்

பழநி:பழநியில் ஆக்கிரமிப்பு விவசாயத்தால் யானைகள், மான் போன்ற விலங்குகள் நீர் அருந்த வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆட்கள் நடமாட்டத்தால் இவை அணை பகுதிகளில் வந்து செல்வதில் சிரமப்படுகின்றன. அணைகளில் ஆக்கிரமிப்பு விவசாயத்தை அகற்ற பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.பழநி வனப்பகுதியில் தண்ணீர் தேவைக்காக, மலையடிவார பகுதிகளுக்கு யானை, மான்கள், காட்டுமாடு, காட்டுபன்றிகள் வருகின்றன. வனப்பகுதியில் கடும் வறட்சிகாரணமாக, சமீபகாலமாக தேக்கந்தோட்டம், ஆண்டிபட்டி, பாலாறுபொருந்தலாறு அணை பகுதிகளில், யானைகள், காட்டுமாடு, மான் போன்ற விலங்குகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.இவ்வாண்டு போதிய மழையில்லாததால், விவசாயமும் குறைந்தளவு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது பாலாறு பொருந்தலாறு அணை, வரதமாநதி அணைப்பகுதியில், தேங்கியுள்ள தண்ணீரின் அளவு குறைந்து உள்ளது.இதையடுத்து கரைப்பகுதிகளில் பலர் ஆக்கிரமித்து பயறு வகைகளை சாகுபடி செய்து வருகின்றனர். சில நேரங்களில் அதிக வீரியமுள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளை செடிகளுக்கு தெளிப்பதால், அவற்றை உட்கொள்ளும் விலங்குகள் இறந்து விடும் அபாயம் உள்ளது. மேலும் ஆட்கள் நடமாட்டம் ஆக்கிரமிப்பு விவசாய பகுதிகளில் இருப்பதால் வனவிலங்குகள் நீர் அருந்த வருவதில் தயக்கம் காட்டுகின்றன. இதனால் யானைகள், மான், காட்டு மாடு ஆகியவை தண்ணீர் கிடைக்காமல் சிரமப்படுகின்றன.ஆக்கிரமிப்பு விவசாயத்தை கட்டுப்படுத்தினால், இப்பிரச்னை ஓரளவு குறைய வாய்ப்புள்ளது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள அணைப்பகுதியில், தண்ணீர் குறைவதற்குகேற்ப விவசாய பரப்பளவு அதிகரித்து கொண்டே வருகிறது. அணைகளில் ஆக்கிரமிப்பு விவசாயத்தை கட்டுபடுத்த, பொதுபணித்துறையினருக்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட வேண்டும்.

## கை கொடுத்து வரும் கட்டிட தொழில் விவசாய பணி கிடைக்காததால் வேறு தொழிலுக்கு மாறிய நிலை

தர்மபுரி: விவசாய தொழில் கை கொடுக்காத நிலையில், தர்மபுரி மாவட்ட தொழிலாளர்கள், கட்டிட பணிக்கு மாறத்துவங்கியுள்ளனர். வெளி மாநிலங்களில் வேலை வாய்ப்பு கிடைப்பதால்,

தொழிலாளர்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட, தர்மபுரி மாவட்டத்தில், பத்தாண்டாக விவசாய தொழில், சிறப்பாக இல்லை. குறிப்பாக, இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போன நிலையில், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

கல்வியில் பின் தங்கிய தர்மபுரி மாவட்டத்தில், 60 சதவீதம் பேர், விவசாய கூலி வேலையை நம்பியுள்ளனர். தொடர்ந்து, விவசாயம் எதிர்பார்த்த பலன் இல்லாத நிலையில், நிலங்கள் வைத்திருப்போர், கூலி தொழிலாளர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தை குறைக்க இயந்திரங்களை பயன்படுத்துவதோடு, உற்பத்தி பொருட்களுக்கு விலை கிடைக்காததால், சிறு விவசாயிகள், தங்கள் குடும்பத்தினரை, முழு அளவில் விவசாய பணிகளில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

இதனால், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கேள்விக்குறியானது. குறிப்பாக, ஆறு மாதத்தில், பணிகள் இல்லாமல், விவசாய தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டனர். கிராம பகுதியில் நடந்து வரும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நடக்கும் பணியால், பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது.

விவசாயத்தில் எதிர்பார்த்த லாபம் இல்லாததால், விவசாய நிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால், சாகுபடி பரப்பும் வெகுவாக குறைந்துள்ளது. விவசாய கூலி தொழிலாளர்களுக்கு, வேலை வாய்ப்பு இல்லாத நிலையில், தொழிலாளர்கள் மாற்று தொழிலுக்கு மாற துவங்கியுள்ளனர்.

விவசாய பணிக்கு ஈடாக, நகரப்பகுதியில் கட்டிட பணிகள் நடந்து வருவதால், பலரும், கட்டிட பணிக்கு களம் இறங்கி விட்டனர். கட்டிட பணிகளில், உதவியாளர் தேவை அதிகரித்துள்ளதால், இந்த பணிக்கு செல்லும் கூலி தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அண்டை மாநிலமான கர்நாடகா மாநிலத்தில், கட்டிட பணிகள் சுறுசுறுப்படைந்துள்ள நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் இருந்து, அதிக அளவில் கட்டிட பணிக்கு, குடும்பத்தினருடன் விவசாய கூலி தொழிலாளர்கள் செல்வதும் அதிகரித்துள்ளது.

கட்டிட பணியில், நிரந்தரமாக தினசரி வேலை வாய்ப்பு இருப்பதோடு, தினம், 350 முதல், 400 ரூபாய் வரை, கூலி கிடைப்பதால், பணிகள் நடக்கும் பகுதியில் தங்கியிருந்து, பணி செய்வதோடு, மாதம் ஒரு முறை சொந்த ஊருக்கு வந்து செல்கின்றனர்.

பெரும்பாலான தொழிலாளர்கள், குடும்பத்தினருடன் அங்கு இடம் பெயர்ந்து வருவதோடு, குறிப்பிட்ட மாதங்கள் தங்கியிருந்து, பணிகளை முடித்த பின்னர் ஊர் திரும்புகின்றனர்.

அதேபோல், உள்ளூரிலும் கட்டிட பணிக்கு ஆட்கள் தேவை அதிகம் இருப்பதால், உள்ளூர் கட்டிட

பணிகளிலும், விவசாய தொழிலாளர்கள் அதிக அளவில் ஈடுபட துவங்கியுள்ளனர்.

கடும் வறட்சி வாட்டும் நிலையில், விவசாய பணி கைவிட்ட நிலையில், தர்மபுரி மாவட்ட தொழிலாளர்களுக்கு, கட்டிட பணிகள் பெரும் அளவில் கை கொடுத்து வருகிறது.

## விழுப்புரம் நகராட்சி பகுதிக்கு வறட்சி நிவாரண நிதி ஒதுக்கீடு

விழுப்புரம்:வறட்சி நிவாரணம் திட்டத்தையொட்டி விழுப்புரத்தில் நகராட்சி மன்ற அவசர கூட்டம் நடந்தது.

விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடந்த அவசர கூட்டம் நகராட்சி தலைவர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது. துணை தலைவர் முத்துலட்சுமி தட்சணாமூர்த்தி, ஆணையர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி அமைத்து தரும் பணிக்காக 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தல், நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்வது, நகரில் சாலை மையப் பகுதியில் உள்ள மின் கம்பங்களை மாற்றியமைத்தல் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில், கவுன்சிலர்கள் பாபு, தங்கசேகர், மணவாளன், குமார், மல்லிகா, அமருனிசா, செந்தில்குமார், சாகுல்அமீது கலந்து கொண்டனர்.

## புடலங்காய் சாகுபடி அமோகம்: குறைந்த செலவில் அதிக லாபம்

செய்யூர்:புடலங்காய் சாகுபடியில், குறைந்த செலவில் நல்ல லாபம் பெறலாம் என, ஓணம்பாக்கம் விவசாயி தெரிவித்தார்.சித்தாமூர் - செய்யூர் சாலையில் உள்ளது ஓணம்பாக்கம். இப்பகுதி மக்கள், தற்போது,தோட்டக்கலை பயிரான காய்கறி பயிரிடுவதில், ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதில், புடலங்காய் பயிரிடுவதன் மூலம் குறைந்தளவு நீரில், மூன்று ஆண்டுகள் வரை லாபம் பெறலாம் என, அப்பகுதி விவசாயி கபாலி தெரிவித்தார்.மாற்றுப்பயிர்இதுகுறித்து, அவர் கூறியதாவது:எனக்கு சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. 6 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, பயிர் செய்து வருகிறேன். நெல் பயிரிட்டால், அதிக நீர்தேவைப்படுகிறது. அதிக செலவும் ஆகிறது. மேலும், எலி மற்றும் பூச்சித் தொல்லையால்,போதுமான மக‹ல் கிடைப்பதில்லை. இதனால், எங்கள் ஊரில் அதிகமானோர் புடலங்காய் சாகுபடி செய்து, லாபம் அடைகின்றனர். தற்போது, நானும், கடந்த நான்கு ஆண்டுகளாக புடலை பயிர் செய்து வருகிறேன்.சாகுபடி முறைஇந்தாண்டு, அரை ஏக்கர் நிலத்தில், புடலங்காய் பயிர் செய்துள்ளேன். இதன் மூலம், எனக்குபோதுமான வருமானம் வருகிறது. அரை ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய, ஒன்னே முக்கால்

கிலோ விதைதேவைப்படும். விதையை, திண்டிவனத்தில் வாங்கி வந்தேன். விதையை நடுவதற்கு முன், நிலத்தை நன்றாக உழுது, சமன் செய்து, இயற்கை மற்றும் அடி உரம் இடவேண்டும். 5 அடி இடைவெளியில் குழி எடுத்து, விதையை நட்டு பராமரித்து வரவேண்டும்.பராமரிப்புகொடி வளரும் போது, இதற்கு பந்தல் அமைக்கவேண்டும். அரை ஏக்கருக்கு பந்தல் அமைக்க, ஒரு சென்ட் நிலத்திற்கு, ஒரு கிலோ கம்பிதேவைப்படும். இதன் விலை, 65 ரூபாய். அரை ஏக்கருக்கு, 50 கிலோ கம்பியுடன், 15 கிலோ டொய்ன்தேவைப்படும். இதன் விலை, ஒரு கிலோ 160 ரூபாய் ஆகும். பந்தலில், கொடி படரத் தொடங்கியவுடன் 60 நாட்களில், காய் காய்க்க தொடங்கும். தொடர்ந்து, 5 மாதங்கள் காய் பறிக்கலாம்.மகசூல்ஒருநாள் விட்டு, ஒருநாள் காய்களை பறிக்கலாம். இதில், 100 முதல் 150 கிலோ வரை மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ காய், 10 முதல் 13 ரூபாய் வரை விற்பனையாகிறது.கோயம்பேட்டில் இருந்து, தினமும் வரும் லாரி மூலம் அனுப்பி விடுவோம். தேவைப்படும் போது, பணத்தினை பெற்றுக் கொள்வோம். முதல் ஆண்டில் மட்டும், அனைத்து செலவுகளும்சேர்த்து, 30 ஆயிரம் ரூபாய் செலவாகும்.லாபம்ஆனால், 5 மாத விளைச்சலில், 75 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். ஒரு முறை அமைக்கப்படும் பந்தல், மூன்று ஆண்டுகள் வரை இருக்கும். இதனால், அடுத்தடுத்த ஆண்டுகளில், விதை, உழவு, உரம் மற்றும் களை ஆகிய இனங்களுக்கு மட்டுமே செலவு செய்ய வேண்டி வரும். எனவே, இரண்டாவது, மூன்றாவது ஆண்டுகளில், நல்ல லாபம் கிடைக்கும்.

## காவிரி தீர்ப்பால் காய்ந்த கொடிவேரி பாசனம் மேய்ச்சல் நிலமாக மாறிய விளை நிலங்கள்

கோபிசெட்டிபாளையம்: பவானிசாகர் அணை நீர் மட்டம் தொடர்ந்து சரிந்தாலும், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பால், கொடிவேரி அணை பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதில் ஏற்பட்ட சிக்கலால், 25 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி கேள்விக்குறியாகி உள்ளது.

ஈரோடு மாவட்ட விவசாயம், குடிநீரின் ஜீவாதாரமாக பவானிசாகர் அணை உள்ளது. தொடர் வறட்சியால், பவானிசாகர் அணை நீரின் அளவு குறைந்து, நீர் மட்டம், 32 அடியாக உள்ளது. நீர் வரத்து, 400 கனஅடியாக உள்ளது. ஜூனில் தென்மேற்கு பருவமழை துவங்கும் நிலையில்தான், அணைக்கு நீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில், நீர் மட்டம் உயர வாய்ப்பில்லை.

பவானிசாகர் அணையில் இருந்து வெளியேறும் நீர் கொடிவேரியில் தடுக்கப்பட்டு, அரக்கன்கோட்டை, தடப்பள்ளி என இரு பகுதிகளாக பாசனம் பெறுகிறது. ஆண்டுதோறும், ஏப்ரல், 15ல் கொடிவேரி பாசனத்துக்கு முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

தடப்பள்ளியில், 17 ஆயிரத்து, 650 ஏக்கரும், அரக்கன்கோட்டையில், 6,500 ஏக்கரும் நெற்பயிர் சாகுபடி செய்யப்படும். அணையில் போதிய நீர் இ ன்றி, கடந்த செப்டம்பரில், இர ண்டு போக சாகுபடி தடைபட்டு, 25 ஆயிரம் ஏக்கர் நெல் மகசூல் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

ஏப்ரல், 15ல் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும், என கொடிவேரி அணை பாசனதாரர்கள் நம்பி இருந்தனர்.

கடந்த, 500 ஆண்டுக்கு மேலாக பாசன வசதி பெற்ற கொடிவேரி அணை பாசனம், 2007ல் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு, பாசனதாரர் நலனுக்கு எதிராக அமைந்துள்ளதாக கூறி, கொடிவேரி அணை பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் அண்மையில், கோபியில் எழுச்சி பேரணி நடத்தி, ஆர்.டி.ஓ.,விடம் மனுக்கொடுத்தனர்.

அம்மனுவில், கடந்த, 500 ஆண்டுகளுக்கு மேலாக பவானி ஆற்றுபடுகை நிலங்களான தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிக்கு ஆண்டுக்கு, 10 மாதம், 16 டி.எம்.சி., தண்ணீர் கிடைத்து வந்தது. இனி வெறும், 4.6 டி.எம்.சி., தண்ணீர் மட்டுமே கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்நீரில், இனி விவசாயம் செய்ய இயலாது.

தமிழக அரசும், அரசால் நியமிக்கப்பட்ட காவிரி தொழில் நுட்ப குழுவும், மாநிலத்தின் பாசனம் சார்ந்த பகுதிகளை பற்றி வாதிடும்போது, தஞ்சை பகுதியின் பழைய ஆயக்கட்டு உரிமையினை கேட்டு வாதிட்டவர்கள், மேற்கு மண்டல பகுதியான தடப்பள்ளி, அரக்கன்கோட்டையின் ஆண்டாண்டு கால பாசன உரிமையை நிலைநாட்ட தவறிவிட்டனர்.

எனவே, கொடிவேரி பாசன பகுதிக்கு தொடர்ந்து, 10 மாதங்கள் தண்ணீர் விட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என கேட்டுக்கொண்டனர். அø ணயில் நீர் இருப்பு குறைந்து, காவிரி நடுவர் மன்ற தீர்ப்பாலும், ஏப்ரல், 15ல் திறக்கப்பட வேண்டிய தண்ணீர், 15 நாட்களுக்கு மேலாகியும் திறக்கப்படவில்லை. அரசிடம் இருந்து எவ்வித அறிவிப்பும் வரவில்லை. இதனால், கொடிவேரி அணை பாசனத்துக்கு உட்பட்ட, 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெல் சாகுபடி கேள்விக்குறியாக உள்ளது.

கடந்த, செப்டம்பர் முதல் தண்ணீர் கிடைக்காமல், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதி கடும் வறட்சியில், நிலங்கள் வெடித்துள்ளன. பாசனம் துவங்காமல், பாசன நிலங்கள், ஆடு, மாடுகளின் மேய்ச்சல் நிலமாக மாறிவிட்டது.

## பையர்நத்தத்தில் உழவர் பெருவிழா

பாப்பிரெட்டிப்பட்டி: பாப்பிரெட்டிப்பட்டி யூனியனுக்கு உட்பட்ட பையர்நத்தம் கிராமத்தில், உழவர் பெரு விழா நடந்தது.

வட்டார வேளாண் உதவி இயக்குனர் மனோகரன் தலைமை வகித்தார். பஞ்சாயத்து தலைவர் வஜ்ஜரவேல் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக வேளாண் துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) மேகநாதன் பங்கேற்று, இரண்டாம் பசுமை புரட்சி உருவாக்குதல், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல் குறித்தும் விளக்கினர்.

வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி சரவணன் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். அரசின் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானிய விபரங்கள் உள்ளிட்டவைகள் விளக்கப்பட்டது. ஏற்பாடுகளை வேளாண் துறை ஊழியர்கள் செய்திருந்தனர்.

## விவசாயிகள் வறட்சி நிவாரண தொகை பெற பாங்கு கணக்கு எண்ணை விஏஓவிடம் ஒப்படையுங்கள்

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சி நிவாரண தொகை பெறுவதற்கு வி.ஏ.ஓக்களிடம் பாங்க் கணக்கு எண்ணை உடனே தெரிவிக்குமாறு விவசாயிகளை கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து கலெக்டர் ஆஷீஷ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து அரசுக்கு விரிவான அறிக்கை அனுப்பப்பட்டன. அதன் அடிப்படையில் நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்களை கொண்ட உயர்மட்ட குழு தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்தது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தற்போது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 50 சதவீதத்திற்கு மேல் நெல் பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் நிவாரண தொகையும், பாசன ஆதாரம் உள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் 50 சதவீதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4 ஆயிரம் நிவாரண தொகையும், மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்ட பயிர்களில் 50 சதவீதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 3 ஆயிரம் நிவாரண தொகை வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிவாரண தொகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பாங்கு கணக்குகளில் நேரடியாக

செலுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அனைவரும் தங்கள் வேளாண்மை தொடக்க கூட்டுறவு பாங்கு எண் அல்லது தேசியமயமாக்கப்பட்ட பாங்கில் உள்ள கணக்கு எண்ணை உடனே தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரிடம் (வி.ஏ.ஓ) தகுந்த ஆதாரத்துடன் (ஜெராக்ஸ் காபி) ஒப்படைக்க வேண்டும்.

பாங்கு கணக்கு இல்லாத விவசாயிகள் உடனடியாக ஏதாவது பாங்கு ஒன்றில் கணக்கு துவக்கி பாங்கு கணக்கு எண்ணை ஒப்படைக்க

வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## திராட்சை ஆராய்ச்சி நிலையம் பணிகள் துவங்குவது எப்போது

கம்பம்:திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணிகளை துவங்குவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் திராட்சை சாகுபடியில் மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக, அதிக பரப்பில் திராட்சை சாகுபடி செய்வது தேனி மாவட்டம் ஆகும். தமிழகத்தில் ஆண்டுமுழுவதும் திராட்சை சாகுபடி செய்யப்படும் பகுதியாக கம்பம் பள்ளத்தாக்கு உள்ளது.திராட்சை விவசாயிகளுக்கு லாபம் கிடைப்பதில் தடங்கல் இருந்து வந்தது. எனவே ஒயின் தொழிற்சாலை துவக்கப்பட்டது. ஏற்றுமதி மற்றும் ஒயின் தயாரிப்பிற்கு ஏற்ற ரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு, பயிற்சி வழங்கப்பட்டது.மேலும், தகுந்து பூச்சி மருந்து தெளித்தல், ஏற்றுமதி ரகம் சாகுபடி செய்தல், நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்துதல் போன்றவற்றிற்காக, திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வலியுறுத்தப்பட்டது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன், அதற்கான பணிகள் துவங்கப்பட்டது.இருந்த போதும் முழுமை பெறவில்லை. தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டது.ராயப்பன்பட்டி சண்முகாநதி அணைக்கு அருகில், ஆராய்ச்சி நிலையம் அமைக்கஇடம் கையகப்படுத்தப்பட்டது.இதற்கென பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இரண்டுபேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஒருங்கிணை ப்பாளர்களாக நியமிக்கப்பட்ட இந்த பேராசிரியர்கள் என்ன ஆனார்கள் என தெரியவில்லை.ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் கூட துவங்கவில்லை.திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்குரிய பணிகளை துரிதப்படுத்த விவசாயிகளின் வாழ்வில் வளம்பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மானியத்தில் சொட்டு நீர் பாசனம்

தேனி:விவசாயம் சார்ந்த மாவட்டம் தேனி. நெல் தவிர தென்னை, வாழை, திராட்சை, பப்பாளி உள்ளிட்ட தோட்டகலை பயிர்கள் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வறட்சி காலங்களிலும், சாகுபடியை பெருக்க வேண்டும், என்ற நோக்கில் அரசு சொட்டு நீர் பாசனம் முறையை ஊக்குவித்து வருகிறது. தேனி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில், விளைநிலங்களில் சொட்டு நீர் பாசனத்தை மேம்படுத்த 750 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விருப்பப்படும் சிறு,குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் சொட்டு நீர் பாசனம் அமைக்க, வழி வகை செய்யப்படும். மேலும் விபரங்களுக்கு, அந்தந்த தோட்டக்கலை துறை வட்டார அலுவலகங்களை தொடர்பு கொள்ள வேண்டும்,என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செவ்விளநீர் கன்றுகள் நடவில் விவசாயிகள் ஆர்வம்

பெரியகுளம்:பெரியகுளம் பகுதிகளில் குறுகிய கால செவ்விளநீர் தென்னங்கன்றுகள் அதிகளவில் நடவு செய்யப்படுகிறது.பெரியகுளம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் உள்ளன. தென்னங்கன்றுகள் நட்டு, 5 முதல் 7 ஆண்டுகளுக்குள் மரமாகி, இளநீர் மற்றும் தேங்காய் கிடைக்கிறது. 45 நாட்களுக்கு ஒரு முறை தென்னங்காய் வெட்டப்படுகிறது. மரத்தின் வாழ்நாள் 70 ஆண்டுகளாகும்.தற்போது குறுகிய காலத்தில், செவ்விளநீர் தென்னங்கன்றுகள் நடுவது அதிகரித்துள்ளது. மூன்று ஆண்டுகளில் மரமாகி பயனுக்கு வருகிறது.செவ்விளநீர் தென்னை மரத்திலும்,45 நாட்களுக்கு ஒருமுறை இளநீர் வெட்டப்படுகிறது. மரத்தின் வாழ்நாள் 35 ஆண்டுகளாகும். இவ்வகையான மரத்தில் இளநீர் மட்டும் கிடைக்கும்.கோடைகாலத்தில் மட்டும் இளநீருக்கு கிராக்கி இருந்தது. இதில் மருத்துவ பலன் அதிகளவில் உள்ளதால், அனைத்து நாட்களிலும் இளநீர் குடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது. செவ்விளநீர் ஒன்று 15 முதல் 20 ரூபாய் வரைக்கும் விற்கப்படுவதால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது.வியாபாரிகளும் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். குறைந்த ஏக்கர் நிலப்பரப்பு உள்ள விவசாயிகள், அதிகளவில் செவ்விளநீர் தென்னங்கன்றுகளை நட்டு வருகின்றனர்.

## நத்தத்தில் மா விளைச்சல் குறைந்தும் விலை வீழ்ச்சி: விவசாயிகள் பாதிப்பு

நத்தம்:நத்தம் தாலுகாவில் போதிய மழை இல்லாததால் மா விளைச்சல் குறைந்திருந்தும், வெளிமாநில வியாபாரிகள் செலவின காரணங்களால் கொள்முதல் செய்ய வராததால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.தமிழகத்தில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெரியகுளம் ஆகிய ஊர் களுக்கு இணையாக நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கல்லாமை, காசா, செந்தூரா, ராஜபாளையம், காதர், இமாம்பசந்த், பங்கனபள்ளி போன்ற ஜாதி ரகங்களும், வாழைப்பூ, தேன்சிட்டு, கருங்குரங்கு போன்ற நாட்டு ரகங்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.இப்பகுதிகளில் மா விளைச்சலுக்கேற்ற மண் வகை இருப்பதால் இங்கு

விளையும் மாங்காய்கள் அதிக ருசி கொண்டவை. இந்தாண்டு மா சீசனுக்கேற்ற மழை குறைந்த நிலையிலும் கூட விவசாயிகள், குத்தகைதாரர்கள் மரங்களில் கடந்த தை, மாசி வரை மருந்து தெளித்ததால் 60 சதம் வரை பூ, காய்கள் காணப்பட்டன. இதற்கிடைப்பட்ட பங்குனி மற்றும் நடப்பு மாதமான சித்திரை வரை மரங்களில் மா பெருக்கத்திற்கேற்ற மழை பெய்யவில்லை. இதனால்,தற்சமயம் சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமையால் மா பழுப்பதற்கேற்ற வகையில் விளைச்சலின்றி உதிர்கின்றன. கல்லாமை மற்றும் நாட்டு ரகங்கள் ஊறுகாய் மற்றும் சாம்பார், கூட்டு போன்ற சமையலுக்கு குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. மா கமிஷன்மண்டி உரிமையாளர் ஹரிகரன் கூறியதாவது: நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் போதிய மழையில்லை. இதனால் மா விளைச்சல் குறைந்துள்ளது. வெளிமாநில வியாபாரிகள்வராததால், மார்க்கெட்டில் விலை குறைந்து விற்கப்படுகின்றன. (விலை கிலோவில்) கல்லாமை ரூ.8.50, ராஜபாளையம்ரூ.23 முதல் 25க்கும்,செந்தூரா ரூ.15 முதல் 10 க்கும், மல்கோவா ரூ. 30 க்கும், காலப்பாடி ரூ.20 க்கும், நாட்டு ரகங்கள் ரூ.4 முதல் 5 க்கும் விற்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர், என்றார்.

## உழவர் பெருவிழா

கன்னிவாடி:தருமத்துப்பட்டியில் உழவர் பெருவிழா, ஊராட்சி தலைவர் முத்துப்பிள்ளை தலைமையில் நடந்தது. ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பேரவை செயலாளர் சுப்ரமணி, ஊராட்சி துணைத்தலைவர் சக்திவேல் முன்னிலை வகித்தனர். வேளாண்மை வல்லுனர்கள், பயிர் சாகுபடி பாதிப்பிற்கான காரணங்கள், தவிர்க்கும் வழிகள் குறித்து விளக்கினர். வேளாண்மை, பொறியியல் தொழில்நுட்பம், தோட்டக்கலை, கால்நடை, கூட்டுறவு வங்கி அலுவலர்கள், பட்டு வளர்ப்பு துறைகள் சார்ந்த திட்டங்கள், மானியங்கள் குறித்த செயல் விளக்கம் செய்துகாண்பிக்கப்பட்டது. கலைநிகழ்ச்சி நடந்தது. பழநி: சுக்கமநாயக்கன்பட்டி ஊராட்சியில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி தலைவர் கிருஷ்ணவேணி தலைமை வகித்தார். வேளாண்மைத்துறை, கால்நடைத்துறையினரின் கருத்துகாட்சி அமைக்கப்பட்டிருந்தது. சிறுதானியங்கள் விழிப்புணர்வு ஊர்வலத்தை மாவட்ட துணை வேளாண்மை இயக்குனர் தங்கச்சாமி துவக்கி வைத்தார். விவசாயிகள், சுப்ரமண்யா பொறியியல் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தாமணி மற்றும் அலுவலர்கள் செந்தில், கோசல்நாத் செய்திருந்தனர்.



## அரசு பண்ணையில் ரூ.5க்கு ரோஜா செடி மானிய விலையில் பழக்கன்றுகள்



மேலூர் அருகே அரசு பண்ணையில் அலங்கார பூச்செடிகள் ரூ. 5க்கும், ஒட்டு ரக வீரிய பழக்கன்றுகள் ரூ.20க்கும் மானியத்தில் கிடைக்கிறது. ""ஏக்கர் கணக்கில் பழக்கன்றுகளை நடவு செய்ய விரும்புவர்களும் இப்பண்ணையை அணுகலாம்," என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலூர் பூஞ்சுத்தியில் சமுதாய நாற்றங்கால் பண்ணை 15 ஆண்டுகளாக செயல்படுகிறது. இவ்விடத்தை தோட்டக்கலை துறை கடந்த 5 மாதங்களுக்கு முன்பு தன் வசப்படுத்தி, அரசு பண்ணை அமைத்தது. மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த ஒரே பண்ணையின் அலுவலராக பிரபா மற்றும் உதவியாளர்கள் உள்ளனர். 15 ஏக்கர் பரப்பளவில் ஒட்டு ரக மா, நெல்லி, எலுமிச்சை, கொய்யா, சப்போட்டா கன்றுகளும், சவுக்கு, தேக்கு மரக்கன்றுகளும், ரோஜா, அரளி உட்பட அலங்கார பூச்செடிகள், மூலிகை செடிகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

**உதவி வேளாண் அலுவலர் நாகராஜன் கூறியதாவது:** இங்கு பழக்கன்றுகளை விதை போட்டு உற்பத்தி செய்து, செடி பென்சில் அளவு வளர்ந்த உடன் உயர்ரக மரக்கன்றுடன் சேர்த்து பிளாஸ்டிக் கவர் மூலம் கட்டி விடுவோம். கீழ் செடியில் வளரும் சிம்புகளை தொடர்ந்து உதிர்த்துவிட்டு, ஒட்டு சேர்த்த மேல் பகுதியை மட்டும் வளர விடுவோம். இதனால் இது மரமாகி காய்க்கும் போது அதிக பலனை குறைந்த காலத்திலேயே கொடுக்கும். இப் பணியை தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் மட்டுமே செய்ய முடியும். தருமபுரியில் இருந்து வரும் நபர்கள் இப்பணியை இங்கு செய்கின்றனர். அவர்களுக்கு செடி ஒன்றுக்கு ரூ.2.50 கூலியாக தருகிறோம். நெல்லி, சப்போட்டா, எலுமிச்சை போன்ற பழ மரக் கன்றுகளை ஏக்கருக்கு 100 வரை நடவு செய்யலாம். மா மரக்கன்றுகளை ஏக்கருக்கு 40 மட்டும் நடவு செய்ய வேண்டும். 5 மீட்டர் இடைவெளியில் கன்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரே ஆண்டில் பூத்து காய்த்துவிடும். அவற்றை உதிர்த்து விட்டு, மறு ஆண்டு முதல் பலனை எடுக்கலாம்.

அரசு பண்ணையில், இந்த ஆண்டு ஒரு லட்சம் மரக் கன்றுகளை உற்பத்தி செய்வதாக இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது, என்றார். வயலில் மரக்கன்றுகளை நடவு செய்யவோ, பூச்செடிகள் வாங்கவோ விரும்புகிறவர்கள் 98941 05744, 97866 16518ல் தொடர்பு கொள்ளலாம்.

## நவீன தொழில்நுட்பம்



மஞ்சள் நாற்றங்கால் உற்பத்தி - உழவரின் புதிய முயற்சி: தும்பர் கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கர் என்ற உழவர் சேலம் மாவட்டம் அந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம், விஞ்ஞானிகளின் பரிந்துரையின் பெயரில் சென்ற வருடம் குழித்தட்டு முறையில் மஞ்சளில் நாற்றங்கால் உற்பத்தி செய்து சாகுபடியும் செய்துள்ளார்.

தரமான விதைக் கிழங்குகளை ஒவ்வொன்றும் 20-35 கிராம் இருக்குமாறு தேர்வுசெய்து, ஒரு கிலோவிற்கு 30-50 விதை கிழங்குகள் தயாரிக்கப் பட்டது. ஒவ்வொரு விதைக்கிழங்கிலும் 10 வளையங்கள் இருக்கும் விதைக்கிழங்குகளை 3-4 துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு துண்டிலும் இரு வளையங்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு 22,000 துண்டுகள் தேவைப்பட்டன. ஒரு ஏக்கருக்கு விதைக்கிழங்கு 180 கிலோ முதல் 200 கிலோ இருந்தால் போதுமானது. சாதாரண முறையைக் காட்டிலும் குழித்தட்டு முறையில் விதைக் கிழங்கின் அளவு நான்குமடங்கு குறைகிறது.

இயற்கை பூசணக்கொல்லி மூலம் விதைநேர்த்தி செய்துள்ளார். பரிந்துரைக்கப்பட்ட பூசணக்கொல்லி ஒரு கிராம், பூச்சிக்கொல்லி 2 மிலி, யூரியா 5 கிராம் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீரில் கலந்து அதில் 20 நிமிடங்கள் விதைக்கிழங்குகளை ஊறவைத்து, காற்றுப்புகா சாக்குப்பையில் விதைக்கிழங்குகளை இட்டு நிரப்பி வெப்பத்தை ஏற்படுத்த 8 நாட்கள் வரை வைத்திருந்தார். இதனால் முளைப்புத்திறன் அதிகரித்தது. பின் சிறிது முளைத்த விதைக் கிழங்குகளை குழியில் இட்டு தேங்காய் நார்க் கழிவுகளைக் கொண்டு குழிகளை நிரப்பி, குழித்தட்டுக்களை 40-45 நாட்கள் வரை நிழல்வலை குடிலில் வைத்து பராமரித்துள்ளார். 40 நாட்களுக்குப் பின் வயலில் நாற்றுக்களை நடவு செய்துள்ளார். வரிசைக்கு வரிசை 40 செ.மீ. இடைவெளி வீதம் செடிக்குச்செடி 30 செ.மீ. இடைவெளி இருக்குமாறு செய்தார். மூன்று நாட்களுக்குஒரு முறை நீர்ப்பாசனம் செய்தார். பூச்சி நோய் தாக்குதலிலிருந்து பயிரைப் பாதுகாக்க இயற்கை, ரசாயன வேளாண் உத்திகளை கையாண்டார். ஒரு ஏக்கருக்கு 25 குவிண்டால்(உலர் எடை) மஞ்சள் விளைச்சல் கிடைத்துள்ளது.

குழித்தட்டு நாற்றங்கால் பயன்கள் பற்றி குறிப்பிடும்போது, ஆரோக்கியமான விதை மூலம் நாற்று உற்பத்தி செய்ய முடிந்தது; மண்ணின் வளம் மேம்பட்டு நீண்டநாள் சத்துக்களை கிரகித்து

வைக்கிறது. விதை உபகரணங்களின் தேவை குறைந்தது. இதனால் பொருளாதாரம் மேம்பட்டது. சாதாரண முறை அளவே விளைச்சல் இல்லாததாலும், விதையின் அளவு அதற்குண்டான செலவும் குறைந்தது. இதில் 100 சதம் நடவு செய்த அனைத்து செடிகளும் வேர்பிடித்து விளைச்சலுக்கு வந்தது. வயல் செலவு, களைக்கொல்லி செலவு குறைந்தது. நாற்று நடவு செய்து அறுவடை வரை ஒரு மாதம் வயலில் பயிர் வயது குறைகிறது. இந்த தொழில்நுட்பத்தை வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சியின் மூலம் துல்லியமாகச் செய்வதற்கு வழிவகுக்குமாயின் மஞ்சள் சாகுபடியில் இந்த முறை மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்றார் அனுபவ விவசாயி. (தகவல்: முனைவர் செ.மாணிக்கம், முனைவர் பெ.ச.கவிதா, முனைவர் ம.அ.வெண்ணிலா, 0427-242 2550)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## நெல் விதைநேர்த்தி



நெல் விவசாயி எ.எஸ். தர்மராஜன் நெல் விவசாயத்தில் பாரம்பரிய முறைகளை அனுசரிப்பதில் மிகுந்த அக்கறை உள்ளவர். இன்று நெல் விவசாயம் செய்பவர்கள் பலருக்கு இவரை நன்றாகத் தெரியும். தற்போது நெல் விதை நேர்த்தியை செய்வதில் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருக்கின்றார். இவர் பல நெல் ரகங்களை சாகுபடி செய்து பயன் அடைந்து விவசாயிகளுக்கு சிபாரிசு செய்துள்ளார். அவர் விதை நேர்த்தியில் தனக்குத் தெரிந்த விஞ்ஞானத்தை விளக்கு கிறார். அதோடு அமாவாசை வேளையில் நெல் விதைப்பினை எப்படி செய்யலாம் என்று யோசனைகள் தெரிவிக்கின்றார்.

தற்போது பாரம்பரிய நெல் விதை நேர்த்தியைப் பார்ப்போம். 30 கிலோ நெல் விதையை ஒரு பாத்திரம் அல்லது டிரம்மில் 18 மணி நேரத்திற்கு ஊறவிட வேண்டும். அதன் பிறகு ஒரு சாக்கை எடுத்து ஒரு கிலோ வீதம் வாதநாராயணன் மற்றும் குப்பைமேனி இலைகளை சாக்கின் அடியில் பரப்பவும். இந்த அடுக்கின் மேல் காய்ந்த பசுமாட்டு சாணத்தை பரப்பவும். ஊறவைத்த நெல்லை இதன்மேல் கொட்டவும். சாக்கில் நான்கில் மூன்று பகுதி அளவு வரை நெல்லை நிரப்பி, இந்த நெல் விதைகளுக்கு மேல் மீண்டும் காய்ந்த சாணத்தை வைக்க வேண் டும். இதற்கு மேல் மீண்டும்

ஒரு முறை ஏற்கனவே சாக்கின் அடிப் பகுதியில்இட்டதுபோலஒருகிலோ வீதம் வாதநாராயணன் மற்றும் குப்பைமேனி இலைகளை பரப்ப வேண்டும். அதன்பிறகு சாக்கை மூடி கயிற்றில் கட்டி பாரம் வைத்து 24 மணி நேரம் அப்படியே வைத்து இருக்க வேண்டும். அதன்பிறகு சாக்கை அவிழ்த்து முளை விட்டிருக்கும் நெல் விதைகளை எடுத்து நமது தேவைக்கு ஏற்றவாறு நாற்றங்காலில் விதைக்கலாம். இம்

முறையை பின்பற்றுவதால் நாம் வழக்கமாக விதை நேர்த்தி செய்து விதைக்கப்பட்ட நெல்லைவிட நெல் விதைகள் விரைவாக, அதிகமாக முளைப்பது மட்டுமன்றி செம்புள்ளி நோயை எதிர்த்து வளரும் திறனுடையதாகவும் அமைகிறது. மேலும் இம்

முறைப்படி விதைநேர்த்தி செய்யப் பட்ட நெல் பயிரிலிருந்து அதிக அளவு நெல்மணிகள் கிடைக்கின் றன. இவ்விதைநேர்த்தி செய்யப் பட்ட நெல் பயிரிலிருந்தும் இம்முறை விதைநேர்த்தி செய்யப்படாத வெள்ளைப் பொன்னி நெற்பயிரிலிருந்தும் கிடைத்த நெல்மணிகளை ஆய்வு செய்ததில் இம் முறைப்படி விதைநேர்த்தி செய்யப் பட்ட நெற்கதிரில் 250க்கு மேல் நெல்மணிகள் உண்டாகி இருந்தது. பொதுவாக வெள்ளைப்பொன்னியில் ஒரு கதிரில் 145 நெல் மணிகள் மட்டுமே பிடித்திருக்கும்.

நெல் விவசாயத்தில் அமாவாசை நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விளக்குகிறார். அமாவாசைக்கு 48 மணி நேரம் முன்பு விதைப்பு செய்தல் மிகவும் முக்கியமானது. பூமிக்கு அருகில் உள்ள நிலா நாள் விதைப்பதைத் தவிர்க்க வேண்டும். பூமிக்குத் தொலைவில் உள்ள நிலா நாள் விதைப்பது மிகவும் நல்லது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**2.05.2013 A.M**

---

## எங்கே விவசாயி

முதன்முறையாக விவசாயிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. 2001ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 1 கோடி பேர் விவசாயத்தை கைவிட்டுள்ளனர். மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரம் இது. ஆதாயம் தரும் தொழிலாக இருந்த விவசாயம் மாறிவிட்டது. எத்தனை இடர்பாடுகள் உண்டோ அத்தனையுமþ இதில் இருக்கிறது. மழை பெய்தாலும் பிரச்னை, பெய்யா விட்டாலும் பிரச்னை, காற்றடித்தாலுமþ பிரச்னை, அடிக்காவிட்டாலும் பிரச்னை என பல இடையூறுகள். இத்தனையும் தாண்டி லாபம் பார்ப்பது கஷ்டமான காரியம். அதனால்தான் விவசாயிகள் பலர் நிலங்களை விற்றுவிட்டு விவசாயத்துக்கு முழுக்குப்போட்டு வருகின்றனர்.

கடந்த 50 ஆண்டுகளாகவே இந்த நிலைமைதான். ஆனால் மக்கள்தொகை பெருக்கம் அதிகமாக இருந்ததால், விவசாயத்தை கைவிடுவோர் எண்ணிக்கை வெளியில் தெரியாமல் இருந்தது. இப்போது ம.தொ. பெருக்கம் குறைந்திருப்பதால் முதன்முறையாக விவசாயிகள் எண்ணிக்கை பெரிதும் குறைந்திருக்கிறது.

விவசாயிகளின் எண்ணிக்கை 11.90 கோடியாக உள்ளது. தொழிலாளர்கள் எண்ணிக்கையில் விவசாயிக்கு இரண்டாவது இடம். 2001ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 7 சதவீதம் குறைந்துள்ளது. அதே நேரம் விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கை 26.5 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதாவது 14 கோடியே 40 லட்சம் பேர். சொந்த விவசாயம் செய்தவர்கள் நிலத்தை விற்றுவிட்டு, விவசாயக் கூலிகளாக மாறியதால் இந்த நிலைமை. விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் சேர்த்து மொத்தம் 26.30 கோடிப் பேர் இன்னமும் மண்ணையும் மழையையும் நம்பித்தான் பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.

ஒரு பக்கம் விவசாய நிலம் குறைந்து கொண்டே போகிறது. காரணம் நஞ்சையும் புஞ்சையும் வீட்டடி மனைகளாக மாறுகின்றன. இன்னொரு புறம்  கூலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வேலை வாய்ப்பு குறைந்து தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, வருமானம் குறையும். ஏற்கனவே விவசாய கூலித் தொழிலாளர்கள் வேறு தொழிலுக்கு போவது அதிகமாக உள்ளது. இந்த வேகம் இன்னும் கூடும். அப்போது ந¤லத்திலும் களத்து மேட்டிலும் இயந்திரங்களை மட்டுமே காண முடியும். மக்கள் தொகை குறைந்த நாடுகளுக்கு வேண்டுமானால் அது நன்றாக இருக்கலாம். இந்தியாவுக்கு இருக்காது.

## ஒரே டெண்டர், ஒரே விலை சத்துணவு முட்டை சப்ளையில் புதிய நடைமுறை அமலானது



நாமக்கல்: தமிழகத்தில் சத்துணவு திட்டத்தின் கீழ் மதிய உணவு சாப்பிடும் பள்ளி குழந்தைகளுக்கு வாரம் 5 முட்டை இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்கு தேவையான முட்டைகளை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (என்.இ.சி.சி) நிர்ணயிக்கும் விலையை அடிப்படையாக வைத்து டெண்டர் நடத்தப்படுகிறது. இந்த டெண்டரில் நாமக்கல்லை சேர்ந்த பெரிய பண்ணையாளர்கள் மற்றும் பெரிய வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து சத்துணவுக்கு முட்டை சப்ளை செய்யும் ஆர்டரை பெற்று வந்த னர். டெண்டர் விதிமுறைகள் சிறிய பண்ணையாளர்கள் கலந்து கொள்ள முடியாத வகையில் இருந்தது.32 மாவட்டத்திலும் மாதம்தோறும் டெண்டர் நடத்துவதால், ஏற்படும் நிர்வாக செலவை குறைக்கவும், ஆண்டு முழுவதும் சத்துணவு முட்டைக்கு ஒரே விலை நிர்ணயிக்கும் வகையில், மாதாந்திர டெண்டர் முறையை நீக்கி ஆண்டுக்கு ஒரே டெண் டர் என தமிழக அரசு அறிவித்தது. கடந்த ஆண்டு இறுதியில் இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டது.இந்த அறிவிப்புக்கு சத்துணவுக்கு முட்டை சப்ளை செய்யும் பெரிய பண்ணையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அரசின் முடிவை எதிர்த்து பண்ணையாளர்கள்  சென்னை உயர்நீதிமன்றத்தில்

அடுத்தடுத்து  வழக்கு தொடர்ந்தனர். புதிய டெண்டரை எதிர்த்து பண்ணையாளர்கள் தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.ஆண்டு முழுவதும் சத்துணவுக்கு முட்டை சப்ளை செய்யும் டெண்டரை, நாமக்கல் மாவட் டம் திருச்செங்கோட்டை சேர்ந்த நேச்சுரல் புட், சொர்ண பூமி என்ற இரு  நிறுவனங்கள் பெற்றுள்ளன. இவை நாமக்கல்லை சேர்ந்த 150க்கும் மேற்பட்ட  சிறிய கோழிப்பண்ணையாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு முட்டை சப்ளை செய்ய தொடங்கியுள்ளன. மாதாந்திர டெண்டர் முறை கடந்த ஏப்ரல் 30ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. நேற்று முதல் ஆண்டு டெண்ர் நடைமுறைக்கு வந்துள்ளது. தற்போது பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால் அங்கன்வாடி மையங்களுக்கு மட்டும் முட்டை சப்ளை செய்யப்படுகிறது. டெண்டரை கைப்பற்றிய நிறுவனம் நேற்று முதல் அங்கன்வாடி மையங்களுக்கு முட்டை சப்ளை செய்ய துவங்கியுள்ளது.இது குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி கூறியதாவது: சத்துணவு திட்டத்துக்கு இதற்கு முன் முட்டை சப்ளை செய்த பண்ணையாளர்கள் மட்டுமின்றி சிறிய பண்ணையாளர்களும் இனி முட்டை சப்ளை செய்ய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. யார் டெண்டர் எடுத்தாலும் நாமக்கல் பண்ணையாளர்களிடம்தான் முட்டை வாங்கவேண்டும். எனவே புதிய டெண்டர் முறையால் பண்ணையாளருக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றார்.